தீ ஜான்
ஆன்கர்பெர்க்
ஷோ

# கொரோனா வைரஸின் மத்தியில்

# கடவுளின் ஆறுதல்

ஜான் ஆன்கர்பெர்க்
மற்றும்
கேத்தி சிம்ஸ்

# கொரோனா வைரஸ் காலத்தில் தேவனுடைய ஆறுதல்

Dr. ஜான் அன்கர்பார்க் மற்றும் கேத்தி சிம்ஸ்

Dr. ஜான் ஆன்ங்கர்பர்க் மற்றும் கேத்தி சிம்ஸ்

ATRI வெளியீடு Publishing

Copyright 2020

ISBN 9781941135648

License Notes

இந்த eBook உங்களுடைய தனிப்பட்ட பிரயோஜனத்திற்க்கானது. இந்த eBook விற்பனைகோ அல்லது மற்றவர்களுக்கு வழங்குவதற்கோ உரியது அல்ல. எழுத்தாளர்களின் உழைப்பை மதிப்பதற்கு நன்றி.

Unless otherwise குறிப்புடபடாத பகுதிகள் New International Version (NIV) பரிசுத்த வேதாகமத்தில் இருந்து எடுக்கப்பட்டவை. Copyright 1973, 1978, 1984 by சர்வ தேச வேதாகம சமுதாயம் அனுமதியோடு பயன்படுத்தப்பட்டது. சகல உரிமம். பெறப்பட்டுள்ளது.

(ESV) என்று குறிப்பிட்டவை English Standard Version வேதாகமத்தில் இருந்து எடுக்கப்பட்டவை, copyright © 2001 கிராஸ்வே, குட்நியூஸ் வெளியீடு ஊழியங்கள் மூலமாக வெளியிடப்படுகிறது.

(NLT) என்று குறிப்பிட்டபட்டவை a New Living Translation வேதாகமத்தில் இருந்து எடுக்கப்பட்டவை, copyright ©1996, 2004, 2015 டின்டேல் ஹவுஸ் பவுண்டேஷன். டின்டேல் ஹவுஸ் அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. டின்டேல் ஹவுஸ் ஊழியங்களின் பிரிவு. கேரல் ஸ்டீம், இல்லினாய்ஸ் 60188.

பொருளடக்கம்

தலைப்பு பக்கம்

முன்னுரை

நீங்கள் கவலைப்படும்போது எந்த பக்கம் திரும்பிடுவீர்கள்?

நாம் பயப்பட அவசியமில்லை

நீங்கள் தேவனை நம்பிடலாம்

தேவன் நம்முடைய அரணும் பெலனுமானவர்

உதவியற்றவர்களுக்கு தேவன் உதவிடுவார்

நம்முடைய உபத்திரவங்களில் தேவன் ஆறுதல் அளித்திடுவார்

தேவனுடைய நன்மைகளை நாம் மறந்திட கூடாது

துதிக்கும் உணர்வு இல்லாதபோதும் தேவனை துதிக்க கற்றுக்கொள்ளுதல்

தேவன் உங்களோடு இருக்கிறார்

தேவனுடைய சத்தியம்  உங்கள் கேடகமாகும்

தேவன் நொறுங்குண்ட இருதயத்திற்கு நெருக்கமானவர்

ஏன் வேத வசனங்கள் நம்மை தேற்றுகிறது?

பிதாவின் வீட்டில் நமக்காக ஒரு இடம் ஆயத்தமாக்கப்படுகிறது

நமக்கு ஒரு தேற்றரவாளன் இருக்கிறார்

தேவன் எல்லாவற்றிற்கும் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார்

எல்லாம் நம்முடைய கண்ணோட்டம் தான்

சிரிப்பது முக்கியம் தானா

தேவனுடைய அன்பைவிட்டு நம்மை யாராலும் பிரிக்க முடியுமா?

நீங்கள் நேசிப்பவர் மரிக்கும்போது அதை எப்படி எதிர்கொள்ள முடியும்?

தேவன் நம்முடைய கண்ணீர், வேதனை உபத்திரவத்தை அகற்றிடுவார்

நாம் ஏன் உபத்திரத்தை எதிர்கொள்கிறோம்?

தேவனுடனான தனிப்பட்ட உறவை துவங்குவது எப்படி?

ஆசிரியர்களைப் பற்றி

# முன்னுரை

இப்போதும் நீங்கள் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டு வருகிறீர்கள் என்பதை அறிந்திருக்கிறோம். கொரொனோ வைரஸினால் பாதிக்கப்படாத நபர் என்று இந்த உலகத்தில் இன்றைய நிலைக்கு ஒருவரும் இல்லை. இப்போது, மக்கள் பலதரப்பட்ட உணர்வு ரீதியான அனுபவங்களை பெற்று வருகிறார்கள் தனித்து இருக்கவேண்டிய இந்த காலத்தில் தனிமையிலும் – தங்களுக்கு பிரியமானவர்களை இழந்து தவிக்கும் நிலையிலும் இருந்து வருகிறார்கள். அநேகர் பயத்தின் உணர்வோடு இருந்துவருகிறார்கள் அதற்கு காரணம் நம்முடைய எதிர்காலம் எப்படி இருக்குமென்று கிரகிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் (சரீரரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும்). நீங்கள் ஒருவேளை இந்த வைரஸ்சோடு போராடிக்கொண்டு இருக்கலாம் அதனால் சரீரபிரகாரமாகவும் உணர்ச்சி ரீதியாகவும் துவண்டு போய் இதற்கு எப்போது தீர்வு வருமென்று காத்துக்கொண்டு இருக்கலாம். நீங்கள் நிச்சயமாக ஊக்குவிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறீர்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாம் போராடிக்கொண்டு இருந்தாலும், நம்முடைய ஆழமான ஏக்கங்களுக்கான விடையை ஒரே ஒரு இடத்தில் தான் பெற்றுக்கொள்ள முடியும். தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் உங்களோடு இடைபட்டு உங்களுக்கு வேண்டிய நிச்சயத்தை கொடுக்கும்படியாக விரும்புகிறார். அழுத்தம் நிறைந்த காலங்களில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நாங்கள் எங்கு பெற்றுக்கொண்டோம் என்பதை பகிர்ந்திடும் வேளையில் நீங்கள் தேவனுடைய பிரசனத்தையும் அவருடைய ஆறுதலையும் அனுபவிக்கும்படியாக உங்களுக்காக வேண்டிக்கொள்கிறோம்.

## <u>நீங்கள் கவலைப்படும்போது எந்தப் பக்கம் திரும்பிடுவீர்கள்?</u>

*நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். பிலிப்பியர்* 4:6-7

இந்த வசனங்கள் நாம் கவலைப்படாமல் இருக்கவேண்டும் என்கிறது – ஆனால் இந்த நேரத்தில் நாம் அப்படிப்பட்ட உணர்வோடு தான் இருக்கிறோம். நாம் என்ன செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறோம் என்பதை சிந்தித்து பாருங்கள். நீங்கள் எதைக்குறித்தெல்லாம் கவலைப்படுகிறீர்களோ அவற்றை ஜெபத்தில் தேவனிடம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் எப்படி பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் சரி, நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கு காரணங்கள் உள்ளது. எதற்காக நன்றியோடு இருக்கலாம் என்று உங்களால் யோசிக்க இயலாவிட்டால், தேவனுடைய அன்பிற்காக நன்றியோடு இருந்திடுங்கள் (அதை ஒருவேளை நீங்கள் உணராமல் இருந்தாலும் சரி). இந்த வசனமானது, நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையை எதிர்கொண்டாலும் கவலைப்படாமல் இருக்கும் நிலையை அடைய செய்ய தேவனால் இயலும் என்பதை போதிக்கிறது. அவருடைய பிரசன்னத்திற்குள் அவர் உங்களை நேசிக்கிறார் என்பதை விசுவாசிப்பவர்களாக பிரவேசித்திடுங்கள் மேலும் எப்பேர்பட்ட காரியங்கள் சம்பவித்தாலும் தேவன் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சமாதானத்தினால் காத்துக்கொள்வார். வேதம் சொல்கிறது, “நமக்கு நாமே செய்துகொள்ள இயலாததை தேவன் நமக்கு செய்திடுவார்.”

## <u>நாம் பயப்பட அவசியமில்லை</u>

> *“நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்புக்கு பயப்படேன்; தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர் உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.” சங்கீதம் 23:4*

நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறீர்கள் என்பதை தேவன் மாத்திரமே அறிந்திருக்கிறார். கொரோனா வைரஸ்சின் விளைவாக, இன்றைக்கு பல விஷயங்களை குறித்த அச்சத்தோடு இருக்கும் நிலை உருவாகியுள்ளது: நமது உத்தியோகம், நமது வீடு, நமது ஆரோக்கியம், நமக்கு பிரியமானவர்கள் என்று நிறைய விஷயங்களை இழக்க நேரிடுகிறது. பயம் என்பது கொடூரமான ஒரு உணர்வு. இவை நம்முடைய இருதயத்தையும் சிந்தனையையும் ஓடச் செய்கிறது, அதை நாம் சரியாக கட்டுப்படுத்தாவிட்டால் நிச்சயம் தடுமாற்றமாக இருக்கும். கோவிட் – 19 என்பது தரமான அச்சுறுத்தல் தான், நாம் பாதுகாப்பாக இருக்க செய்ய வேண்டிய காரியங்களை செய்திட வேண்டும். என்ன நடக்குமோ என்ற அச்சத்தோடு இருக்க வேண்டிய அவசியமில்லை. பயத்தின் நிமித்தமாகவே ஜனங்கள் பல விஷயங்களை பதுக்கிட துவங்கிவிட்டனர். அது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை கொடுக்கிறது, தங்கள் வீடுகளில் தங்களுக்கு தேவையான அனைத்தும் இருக்கிறது என்பதை அறிந்தவர்களாக இருக்கிறார்கள்.

உங்களுக்கு அச்சப்படும் உணர்வு ஏற்படும்போது, “ஒருவேளை இப்படியானால்” என்ற எண்ணம் உங்கள் மனதை ஆக்கிரமிக்க இடமளிப்பதை நிறுத்திடுங்கள், ஜெபத்தில் தேவனுக்கு தெரியப்படுத்திடுங்கள். “அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருகிறோம்”. (2 கொரிந்தியர் 10:5) நீங்கள் எப்படிப்பட்ட உணர்வோடு இருந்தாலும் சரி, நீங்கள் தனிமையாக இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்: “கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.” (உபாகமம் 31:8).

## <u>நீங்கள் தேவனை நம்பிடலாம்</u>

*உன் சுயபுத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீதிமொழிகள் 3:5-6*

நாம் முழுமையாக நம்புகிறவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அநேகர் இருப்பதில்லை. நமது வாழ்க்கையில் நாம் மற்றவர்களிடம் பழகும்போது அவர்களிடம் நாம் பகிர்ந்துகொள்ளும் விஷயங்களை எப்படி கையாளுகிறார்கள் என்பதை வைத்துதான் ஒருவர் நம்பத்தகுந்தவரா இல்லையா என்று அறிந்துகொள்கிறோம். நீங்கள் உண்மையாய் ஒருவரை நம்பும் பொழுது, உங்களுடைய ஆழ்ந்த எண்ணங்களையும் உங்களுடைய அச்சங்களையும் அவர்களோடு பகிர்ந்திட கூடும். இல்லாவிட்டால், அவர்களோடு பேசுவதில் அதிக நேரத்தை செலவிட நீங்கள் முற்பட மாட்டீர்கள்.

நீங்கள் தேவனை நம்புகிறீர்களா, அல்லது அவர் உங்கள் வாழ்க்கைக்காக கொண்டிருக்கும் திட்டங்கள் உங்களுக்கு பிடிக்காமல் போகுமோ என்ற அச்சத்தில் இருக்கிறீர்களா? உங்களை பிடிக்கும்படி காத்திருக்கிறார் என்று நினைக்கிறீர்களா; நீங்கள் வாழ்க்கையை அலங்கோலமாக்குவதை பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்று நினைக்கிறீர்களா? உங்களுடைய வாழ்க்கை வேதனையில் இருப்பதை தேவன் ஒருபோதும் விரும்புவது இல்லை. உங்களுக்கு எது சிறந்ததோ அதையே கொடுத்திட விரும்புகிறார். நீங்கள் எதற்காக உருவாக்கப்பட்டீர்களோ அப்படியே உங்களை வனைந்து உருவாக்க விரும்புகிறார். நீங்கள் ஒருவரை நம்புவதற்கு

முன்பு எப்படி அந்த நபரை அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறதோ, அதேபோல தேவனை நீங்கள் முழுமையாக நம்புவதற்கு முன்பு தேவனுடைய குணாதிசயத்தை பற்றி அறிந்துகொள்ள வேண்டும். நாம் எதிர்கொள்ளுகிற பயத்தை முறியடிக்க நமக்கு இருக்கிற வல்லமையான ஒரே ஆயுதம் முழுமையாக தேவன் மீது நம்பிக்கை வைப்பது தான். “இதோ தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்; கர்த்தராகிய யோகோவா என் பெலனும், என் கீதமுமானவர்; அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.” (ஏசாயா 12:2)

## <u>தேவனே நமது அரணும் பெலனுமானவர்</u>

*தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். சங்கீதம் 46:1*

கடினமான நேரங்களில் உங்களுக்கான பெலனை எங்கு கண்டடைவீர்கள்? தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும் நாம் அன்பாக இருக்கவும் அவர் நம்மீது அன்பு செலுத்தும்படியாகவும் நம்மை சிருஷ்டித்து இருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறீர்களா? நாம் பிறந்தபோது, நாம் தேவ அன்பில் இருந்து பிரிக்கப்பட்டு இருந்தோம் காரணம் நாம் வெறுமையும் தேவனுக்கு மூடப்பட்டதாக இருந்த ஆதாமிடமிருந்த ஆவிக்குரிய சுபாவத்தை உடையவர்களாக இருந்தோம். ஆகவே, நாம் தேவனால் நேசிக்கப்படவும் நாம் அவரை நேசிக்கவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிவதில் பிரட்சனை இருந்தது, நாம் அந்த அன்பை இழந்து வாழ்ந்துகொண்டு இருந்தோம். அப்படிப்பட்ட அன்பை நாம் சக மனிதனிடம் கிடைக்குமா என்று தேடிக்கொண்டு இருந்தோம், ஆனால் அதே அன்பு கிடைக்கவில்லை.

ரோமர் 12:1-2 கூறுகிறது, “தேவனுடைய இறக்கங்களை முன்னிட்டு, நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷந்தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.” உங்களுடைய அனைத்து பெலனையும் இழந்தது போல, நீங்கள் பெலவீனமாக உணருகிறீர்களா? நாம் அவருடைய வசனத்தை கொண்டு நமது மனதை நிரப்பைடும்போது தேவனே நமது அரணும் பெலனுமாக இருக்கிறார். அவரே நம்முடைய தேவைகளை சந்திக்கும் பிரதான காரணராக இருக்க விரும்புகிறார் (இறுதியாக போகும் நபராக அல்ல). உங்களுடைய பிரட்சனைகளை அவரிடம் கொண்டு செல்லுங்கள் மேலும் தேவன் மாத்திரமே நீங்கள் நினைப்பதற்கும் மேலாக உங்களை உண்மையாய் நேசிக்கிறவர் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

## <u>உதவியற்றவர்களுக்கு தேவன் உதவிடுவார்</u>

*கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். சங்கீதம் 72:12*

நீங்கள் வேதனையில் இருக்கும்போது யாரிடம் செல்வீர்கள்? நண்பர்கள் சிலவேளைகளில் நமக்கு ஆறுதலளிக்கும் ஊக்கமளிக்கும் வார்த்தைகளை பேசிடுவார்கள், ஆனால் நம்முடைய உணர்ச்சிகளை அவர்களால் அனுபவித்திட இயலாது. நீங்கள் கடந்து செல்லும் நிலையை ஒருவரும் உண்மையாய் புரிந்துகொள்ளவில்லை என்றும் அக்கறை காட்டுவதில்லை என்றும் உங்களுக்கு தோன்றிடலாம். ஆனால் உண்மையாய் நீங்கள் கண்ணீரோடு கதறிடும் போது தேவன் செவிகொடுக்கிறார் என்பதை அறிந்து திடப்படுங்கள். பல நேரங்களில் நம்முடைய பிரச்சனைகளை தேவனிடத்தில் கொண்டு செல்லாமல் நாமே அவற்றை சரி செய்து கொள்ள முயலுகிறோம். ஆனால் நாம் அவற்றை அவருடைய கரத்தில் ஒப்படைக்கும்படி அவர் காத்துக்கொண்டு இருக்கிறார். உங்கள் பாடுகளில் இருந்து உங்களை விடுவித்து உங்களுடைய சகல தேவைகளையும் அவர் சந்திக்க விரும்புகிறார்: “என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவுகளைஎல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்”. (பிலிப்பியர் 4:19). நீங்களாகவே சகலத்தையும் செய்திட முயலுவதை விட்டுவிட்டு உங்களுக்கு தேவையான உதவியை அருளும்படி தேவனிடம் கேளுங்கள்.

## நம்முடைய சகல உபத்திரவங்களில் தேவன் ஆறுதல் அளித்திடுவார்

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். 2* கொரிந்தியர் *1:3-5*

இந்த வேத பகுதியானது, சகவித உபத்திரங்களிலேயும் தேவன் நமக்கு ஆறுதல் செய்கிறவர் என்று கூறுவதை கவனித்தீர்களா? உபத்திரவப்படுதல் என்றால் என்ன என்பது இயேசுவுக்கு தெரியும். அவர் மரணத்திற்கேதுவாக அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார். சிலுவை மரணம் மிகவும் கொடுமையான மரணம்,

ஏனென்றால் சுவாசிப்பதற்கு ஒரு மனிதன் குதிங்காலை உந்தி மேல்நோக்கி நிமிர வேண்டும் (ஆனால் பாதங்கள் இரண்டும் சிலுவை மரத்தில் ஆணிகளால் கடாவப்பட்டு இருந்தது). இதுவரை வேதனையையே அனுபவிக்காத நபர் மனதுருக்கமுடையவராக இருக்க முடியாது காரணம் காயப்பட்டு வேதனையோடு இருப்பவர்களின் உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டதில்லை. இயேசுவால் உங்களுடைய வேதனையின் ஒவ்வொரு நிலையோடும் இடைபட்டு உங்களுக்கு ஆறுதல் அளித்திட கூடும், காரணம் நீங்கள் கடந்துசெல்லும் நிலையை அவர் நன்கு அறிந்தும் புரிந்தும் இருக்கிறார். தேவன் நீங்கள் இப்போது கடந்து செல்லும் அனுபவத்தை பயன்படுத்தி மற்றவர்கள் இதுபோன்ற சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது அவர்களுக்கு நீங்கள் உதவும்படி செய்திடுவார். கடினமான நேரங்களை நாம் கடந்துசெல்லும்போது, அவை நம்மை மாற்றுவது மட்டுமல்ல, மற்றவர்களுடைய சூழ்நிலையை நாம் பார்க்கும் கண்ணோட்டத்தையும் மாற்றுகிறது. அது நமக்கு ஒருவிதமான பட்சாதாப உணர்வை கொடுக்கிறது.

## <u>தேவனுடைய நன்மைகளை நாம் மறந்திட கூடாது</u>

> *என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி; என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி , அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே – அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது. சங்கீதம் 103:1-5*

இந்த வசனங்கள், ஒவ்வொரு பகுதியிலும் நமக்கு தேவையான அனைத்தையும் பலவிதங்களில் சந்திக்கிறார் என்பதற்கு மிகப்பெரிய நினைப்பூட்டலாக இருக்கிறது. அவர் நமது பாவங்களை மன்னிக்கிறார்; நமக்கு நோய்களை குணமாக்குகிறார்; நாம் என்றென்றைக்குமாய் பரலோகத்தில் அவரோடு வாசமாக இருக்கும்படி அவருடைய இரத்தத்தினாலே நமது பாவங்களில் இருந்து நம்மை மீட்டார்; அவருடைய அன்பினாலும் மனதுருக்கத்தினாலும் முடிசூட்டி, நம்முடைய விருப்பங்களை நிறைவேற்று திருப்தியாக்குகிறார். நாம் நேசிக்கப்படுகிறோம் என்பதை அறிந்திருந்தால், நாம் எதிர்கொள்ளும் எந்த சூழ்நிலையையும் கடந்து செல்வதற்கு நமக்கு பெலனையும் சத்துவத்தையும் அளித்திடும். “நாம் தேவனுடைய

பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்” (1 யோவான் 3:1)

## <u>துதிக்கும் உணர்வு இல்லாத போதும் தேவனைத் துதிக்கக் கற்றுக்கொள்ளுதல்</u>

> *நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம். ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபிரேயர் 13:14-16*

இந்த காலகட்டத்தில் வேதனையும் உபத்திரவம் அனுபவித்திடும் பலருடைய அனுபவங்களின் கதைகளை கேட்க்கும்போது, இருதயத்தை நொறுங்கச் செய்கிறது. உங்களுடைய தற்போதைய சூழ்நிலை இருதயத்தை தளரச்செய்வதாக இருந்திடலாம். நம்முடைய சொந்த சூழ்நிலைகளை நாம் பார்த்துகொண்டிருந்தாள், நம்பிக்கையை இழக்க கூடும். ஆனால் நமக்கு ஒரு எதிர்காலம் உண்டென்ற நம்பிக்கையோடு எதிர்நோக்கி இருக்க முடியும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நாம் தற்போது கடந்து வரும் அனுபவங்களை வைத்து தேவனை துதிக்க கூடிய உணர்வு இல்லாமல் இருக்கலாம். இப்படிப்பட்ட நேரத்தில் அவரைத் துதிப்பது உண்மையான பலியாக இருந்திடும்.

நம்முடைய குடும்பம் நண்பர்கள் என்று அனைவரிடமிருந்து விலகி இருப்பதும் நாம் வழக்கமாக செல்லும் வேலை ஸ்தலங்களுக்கு செல்ல முடியாமல் இருப்பதும் நமக்கு வித்தியாசமான அனுபவமாக இருக்கலாம். நாம் வசிக்கின்ற பட்டனமானது பெரும்பாலும் மூடப்பட்டு இருப்பது கடினமாக இருக்கிறது. (இப்படிப்பட்ட காரியங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், இதைதான் நம்முடைய பகுதியை சூறாவளி பேரழிவு தாக்கியது.) இந்த உலகத்தில் இப்போது இருக்கிற சூழலை பார்க்கும்போது, நம்முடைய பார்வை இருளடைவதை உணர முடியும். ஆனாலும் தேவனோ தம்மில் அன்புகூருகிற அனைவரும் ஒருநாள், ஒருவரும் நிர்மூலமாக்க முடியாத பூரணமான புதிய இடத்தில் இருப்பார்கள் என்று கூறுகிறார். நாம் அனுபவிக்கும் இவை அனைத்தையும் பயன்படுத்தி தேவன் அவருடனான நமது எதிர்காலத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறார் என்பதை அறிந்துகொள்ளும்போது, நாம் அவரை துதிக்க முடியும். நாம் கடினமான நிலையையும் உபத்திரவத்தையும் விரும்புகிறோம் என்பதால் அல்ல, இப்போது

சம்பவிப்பவை நிரந்தரமல்ல என்பதை அறிந்திருப்பதால் துதிக்கிறோம். தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொன்னது போல: “நீங்கள் எதிர்ப்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.” (எரேமியா 29:11) அவர் உங்களுடைய வாழ்க்கையிலும் சிறந்த திட்டத்தையும் எதிர்காலத்தையும் வைத்திருக்கிறார்.

## தேவன் உங்களோடு இருக்கிறார்

> *நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னை கைவிடுவதும் இல்லை. உபாகமம் 31:6*

இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமிக்குள் பிரவேசிப்பதற்கு முன், அந்த இடத்தில் இருந்த புரஜாதிகளோடு இவர்கள் யுத்தம் பண்ண நேரிடும் என்பதை மோசே அறிந்திருந்தான். யுத்தத்திற்கு செல்வதை விட அச்சுறுத்தலான காரியம் வேறொன்றும் இருக்க முடியாது, அதனால் தேவன் மோசேக்கு அறிவுறுத்தி கூறுகிறார், “பலங்கொண்டு திடமனதாயிரு.” இதே வார்த்தைகளை பலமுறை தேவன் யோசுவாவிற்கும் கூறியிருக்கிறார், தேவன் அவர்கள் சார்பாக யுத்தம் செய்திடுவார் என்பதை நினைப்பூட்டும்படி கூறியிருக்கிறார், காரணம் அவர்கள் சுதந்தரிக்க போகும் தேசத்தில் நிறைய இராட்சதர்கள் இருந்தனர்.

இன்றாகும் இது நம் ஒவ்வொருவருக்கும் மிகபெரிய நினைப்பூட்டுதலாக இருக்கிறது. நாம் எங்கு சென்றாலும், நம் தேவன் நம்மோடு செல்கிறார் நாம் இருக்கும் இடத்தில் அவரும் இருக்கிறார். நாம் எதிர்கொள்ளும் யுத்தங்களை நம்முடைய சுய பெலத்தால் போராட ஒருபோதும் அவர் விடுவதில்லை. 1 நாளாகமம் 28:20ல் இப்படியாக வாசிக்கிறோம்: “ தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை நோக்கி: நீ பலங்கொண்டு தைரியமாயிருந்து இதை நடப்பி, நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடு இருப்பார்; கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்.” நீங்கள் செய்யும்படிக்கு தேவன் நிர்ணயித்திருக்கும் காரியத்தை செய்யும்படிக்கு தேவன் பெலப்படுத்திடுவார். உங்களுடைய போராட்டத்தில் நீங்கள் தனியாக இல்லை.

## தேவனுடைய சத்தியம் உங்கள் கேடகமாகும்

*அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். சங்கீதம் 91:4*

தேவனுடைய உத்தமத்தை நம்மால் முழுவதுமாக விவரித்து சொல்ல கூடாது. நம்முடைய சத்துருவாகிய சாத்தான் நமக்கு எதிராக வீசுகிற சகலத்திற்கு நம்மை காக்கிற கேடகம் அவர் தான் என்பதை அறிந்துகொண்டால், நாம் கவலைப்பட்டுக்கொண்டு இருக்க மாட்டோம். எபேசியர் 6:16 நமக்கு போதிக்கிறது: "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்."

ஒரு விவசாயி இருந்தார் அவர் புல்வெளியில் ஏற்பட்ட தீயில் கருகிப்போன ஒரு கோழியை பார்த்த ஒரு கதை இருக்கிறது. அவர் அங்கிருந்த சாம்பலை தட்டிவிட்டபோது, அந்த கோழியின் சாம்பலுக்கு கீழிருந்து கோழி குஞ்சுகள் ஓடி வந்ததாம். அதனுடைய செட்டைகள் கேடகமாக இருந்து அவற்றை நெருப்பிற்கு விலக்கி பாதுகாத்துக்கொண்டது. இதைபோல தேவன், நான் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளில் இருந்து தம்முடைய சிறகை விரித்து என்னை அதற்குள் பாத்துகாத்துக்கொள்ளும் விதத்தை கற்பனை செய்து பார்ப்பது ஆறுதலான உணர்வை அளிக்கிறது.

## தேவன் நொறுங்குண்ட இருதயத்திற்கு நெருக்கமாக இருக்கிறார்

*நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். சங்கீதம் 34:18*

நீங்கள் நொறுங்குண்டு இருப்பதாக உணருகிறீர்களா? தொடர்ந்து செல்வதற்கு பெலனற்று இருப்பது போல உணருகிறீர்களா? உங்களுடைய மனதில் வலியும் உங்கள் இருதயமே வெடித்து விடுவது போன்றும் நீங்கள் உணர்ந்து கொண்டு இருக்கலாம். இப்படிப்பட்ட நேரத்தில் தான் உங்களுக்கு பரலோகத்தில் இருந்து அருளப்படும் ஆறுதல் அவசியமாக இருக்கிறது. உங்களுடைய ஆவியை அமைதிப்படுத்திட இயற்க்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய சமாதானம் வேண்டும்.

சங்கீதக்காரன் 73 வது சங்கீதத்தில் துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில் பொறாமைக்கொண்டேன் என்கிறான்: “சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார். ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலும் என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று. துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீப்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமைக்கொண்டேன்; மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது; (சங்கீதம் 73:1-4). நீங்கள் இருதயம் நொறுங்கும் விதமான சூழ்நிலையை எதிர்கொண்டிருக்க அடுத்தவர் எப்படி நிம்மதியாக இருக்கிறார்கள் என்று பார்த்து பொறாமை படுவது எந்தவிதத்திலும் உதவிடாது. இறுதியாக, சங்கீதக்காரன் அவருடைய பெலன் எங்கிருந்து வருகிறது என்பதை விளங்கிக்கொண்டான், “என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது, தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.” (சங்கீதம் 73:26). தேவன் உங்களுடைய பெலனாக இருந்து உங்கள் ஆழமான தேவைகளை சந்திக்கும்படி அவரை அனுமதித்திடுங்கள்.

## வேத வசனங்கள் நம்மை ஏன் தேற்றுகிறது?

*வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. 2 தீமோத்தேயு*

3:16-17

வேதாகமத்தின் 66 புத்தகங்களும், பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டதாக இருக்கிறது. தேவன், தமது பரிசுத்த ஆவியின் வல்லமையினால், இதை எழுதியவர்களுக்கு வார்த்தைகளை அருளினார். தேவன் நம்மை சிருஷ்டித்து இருப்பதினால், நம்மை நாம் அறிந்துகொண்டதை விட தேவன் நம்மை அறிந்திருக்கிறது. ஒரு கட்டத்தில் நான் (கேத்தி) இருதயம் நொறுக்கப்பட்டவளாக என்னால் அழுகையை நிறுத்த முடியாதபடிக்கு அழுதுகொண்டே இருந்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளில் எனது தாயாரையும் எனது சகோதரனையும் நான்

இழந்துவிட்டேன். நான் என்னுடைய வேதாகமத்தை எடுத்து வாசிக்க துவங்கினேன், அவருடைய வசனத்தை தவிர வேறு எங்கும் நாம் கண்டிராத ஆறுதலை தேவன் எனக்கு அருளினார். நீங்கள் தாழ்வில் இருக்கும்போது, தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் பேசுவதற்கும், நொறுங்குண்ட உங்கள் இருதயத்தை உங்களுக்காக எழுதப்பட்ட தமது வார்த்தைகளால் ஆற்றும்படிக்கும் அவருக்கு இடமளித்திடுங்கள். “வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.” (2 பேதுரு 1:20-21).

## <u>நம்முடைய பிதாவின் வீட்டில் நமக்காக ஒரு இடம் ஆயத்தமாக்கப்படுகிறது</u>

> *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால்,, நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உண்டுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். யோவான் 14:1-3*

ஒருவரை நேசிப்பதும் அவரால் திருப்பி நேசிக்கப்படுவதற்கும் மேலான ஒன்று இருக்க முடியாது. நீங்கள் ஒருவரை நேசிக்கும்போது, அந்த நபரோடு இருப்பதற்கு உங்களால் இயன்ற அனைத்தையும் செய்திடுவீர்கள் காரணம் நீங்கள் நேசிக்கும் ஒருவரோடு இருப்பதைவிட மேலான ஒன்று வேறெதுவும் இருக்காது.

ஒருநாள் இயேசு திரும்ப வந்து நம்மை அவரோடு கூட பரலோகத்திலுள்ள தமது பிதாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்வார். அந்த நேர்த்தியான இடத்தில் நாம் நித்தியநித்தியமாக வாழ்ந்திடுவோம். மணவாளன் தன் மணவாட்டி மீது கொண்டிருக்கும் நிபந்தனையற்ற அன்பு போன்ற அன்பினால் இயேசு நம்மை நேசிக்கிறார். நீங்கள் கடந்து வரும் எல்லாவிதமான சூழ்நிலைகளும் அவரை முகமுகமாக தரிசிக்கும் போது கனமாக கருதப்படும்.

## நமக்கு ஒரு தேற்றரவாளன் இருக்கிறார்

*நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். யோவான் 14:16-17*

இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்படும் நாளுக்கு முந்தின இரவு, அவர் தமது சீஷர்களை சந்தித்து அவர் போகும் இடத்திற்கு இவர்களால் பின்தொடர்ந்து வர முடியாது என்று கூறினார். சாதாரணமாகவே, அவர்கள் இத்தனை நாட்கள் ஆராதித்தும் பின்பற்றியும் வந்த நபர் தங்களை விட்டு பிரிந்து போகிறார் என்று தெரிந்து அதிர்ந்துபோய் இருந்தார்கள். அவர்களுடைய உலகமே தலைகீழாக மாறுவது போன்ற உணர்வு ஏற்பட்டிருக்க கூடும்.

இயேசு அவர்களிடம், நாம் பிதாவை வேண்டிக்கொள்கிறேன் அவர் உங்களுக்கு வேறொரு தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார் என்று சொல்லி ஊக்குவித்துக்கொண்டிருந்தார். நீங்கள் உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தால், உங்களுக்கு பரிசுத்த ஆவியானவர் வாசமாக இருந்திடுவார். "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோவான் 14:26). நேரமெடுத்து பரிசுத்த ஆவியானவருக்கு செவிகொடுத்து அவர் உங்களை தேற்றவும் ஊக்குவிக்கவும் இடமளித்திடுங்கள். இதுவரை உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அற்பணித்திடாமல் இருப்பீர்கள் என்றால், எப்படி அற்பணித்திடலாம் என்பதை இறுதி அத்தியாயத்தில் உங்களுக்காக பகிர்ந்திட இருக்கிறோம்.

## தேவன் சகலத்திற்கும் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார்

*அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். ரோமர் 8:28-29*

தேவன் சகலத்திற்கும் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார் – ஆனால் அந்த நல்ல நோக்கம் என்னவாக இருக்கும் என்பதை முற்றிலும் நாம் அறிந்துகொள்ள அவசியமில்லை. இந்த உலகத்தில் இருக்கிற இடையூறுகள் மற்றும்

சரீரப்பிரகாரமான உபத்திரவங்களுக்கான நல்ல நோக்கம் எனக்கு தெரியாமல் இருந்தாலும், தேவன் அந்த காரியங்களில் இடைப்பட்டு கொண்டு தான் இருக்கிறார். நம்மால் தேவனைப் போல யோசிக்க முடியாததால் இப்போது நம்மால் பல விஷயங்களை புரிந்து கொள்ள இயலாமல் இருக்கிறது: "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசாயா 55:8).

ஏன்? என்று கேட்டுக்கொண்டு இருந்தாலும், நாம் கடந்து செல்லும் சூழ்நிலைகள் அர்த்தமற்றது என்று நினைத்தாலும், அவை நம்மை சோர்வடைய செய்ய நாம் கசப்புணர்வுடையவர்களாக மாறிடுவோம். நாம் அனுபவிக்கும் சகல காரியங்களின் விளைவை பார்க்கும்போது, இவை நம்மை இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றிக்கொண்டு இருக்கிறது என்பதை விளங்கிக்கொள்வோம். (காரியங்கள் எவ்வளவு மோசமாக இருந்தாலும் சரி) அசைக்க முடியாத ஒரு விசுவாசம் நமக்கு இருக்குமானால், நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலைகள் நம்மை தேவனுடைய அன்பின் கரங்களுக்குள் இழுத்து சென்றிடும்.

## எல்லாம் நம்முடைய கண்ணோட்டம் தான்

*ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். ரோமர் 8:18*

ஏதோவொரு விதத்தில் நமக்கு வேதனையை உண்டாக்கும் பல செயல்களை நாம் செய்கிறோம். நாம் உடற்பயிற்சி செய்யத் துவங்கும்போது, நம்முடைய தசைகளை வித்தியாசமாக பயன்படுத்துவதால் நமக்கு வேதனை உண்டாக வாய்ப்பிருக்கிறது. இருந்தும், ஏன் இன்றைக்கு சமுதாயத்தில் அநேகர் உடற்பயிற்சி செய்கிறார்கள்? நீங்கள் விரும்புகிற வண்ணம் இருப்பதற்கு நீங்கள் சில வேதனைகளை சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தற்காலிகமான வேதனை அதன் முடிவிற்கு ஒப்பிடத்தக்கவை அல்ல.

அப்போஸ்தலனாகிய பவுல் இதே கண்ணோட்டத்துடன் தான் பிலிப்பியர் 3:7-11,13-14ஐ எழுதியிருக்கிறார்: "ஆகிலும் எனக்கு லாபமாக இருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும்,

நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுந்த வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத்தகுதியாகும்படிக்கும்... ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."

## சிரிப்பது முக்கியம்

*மனமகிழ்ச்சி நல்ல ஒளஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும். நீதிமொழிகள்*

17:22

நீங்கள் கடினமான சூழ்நிலையில் போய்கொண்டு இருக்கும்போது, சிரிப்பது என்பது நீங்கள் இறுதியாக நினைத்துப்பார்க்கும் ஒன்றாக இருக்கும். ஆனால் சிரிப்பது மிகவும் முக்கியம், காரணம் சிரிப்பு மன அழுத்தத்தை குறைக்கும், நம்முடைய உறுப்புகளில் பலவற்றை தூண்டுகிறது, அழுத்தத்தை குறைக்கிறது, எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்கிறது, மேலும் வேதனைகளை அகற்றுகிறது.

பின்வரும் வசனமானது இஸ்ரவேல் தேசத்தால் மற்ற தேசங்களால் உண்டான அழுத்தத்திற்கு கீழ் இருக்கும் போது எழுதப்பட்ட ஒன்றாகும், அது நகைப்பை பற்றிதான் பேசுகிறது: "அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும் நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்திருந்தது; அப்பொழுது, கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்." (சங்கீதம் 126:2). தமது புத்தகத்தில், தேவனுடைய அன்பு: தேவனுடைய தகப்பனின் இருதயத்தை குறித்து ஆழ்ந்து கவனித்தல், இந்த பகுதியை குறித்து ஆழ்ந்து சிந்திக்கும்படியாக ஆஸ்வால்ட் சாம்பர்ஸ் முனைகிறார். இந்த பகுதியின் குணாதிசயம் என்னவென்றால் நடப்பவைகளை குறித்த எதிர்பார்ப்பின்மையோடு இருத்தல், அப்பொழுது நம்முடைய வாய்

நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்திருந்தது. (சங்கீதம் 126:2).இப்படிப்பட்ட ஒன்று எங்களுக்கு சம்பவிக்கும் என்று நாங்கள் கனவில் கூட நினைத்தது இல்லை. இப்படிப்பட்ட மனநிலை ஏதோவொரு இயற்க்கை சீற்றம் உண்டாகும்போது ஏற்படுவதுண்டு. மனிதனுடைய ஆத்துமா பச்சை பசேல் என்றிருக்கும் இடத்தைவிட இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தது அதிகம். நுழைவதற்கு அஞ்சுகிற இருண்ட மேகங்கள் அதிகமுண்டு, இருப்பினும் அந்த இருண்ட மேகத்திற்குள் மெய்யான ஒளி வீசிடும் திடீரென்று வீசிடும். இதற்கான ஆதாரத்தை உண்மையான வருத்தத்திலும் விலாகுலத்திலும் இக்கட்டிலும் பார்க்கிறோம், நினைத்து பார்க்காத நேரத்தில் திடீரென்று வீசிடும் ஒளியானது இவற்றின் வடுவை மறைத்து விடுகிறது, இதை வேறு விதங்களில் அனுபவித்திட இயலாது." தளர்ந்து போக வேண்டாம். உங்களுடைய ஆனந்தத்தை தேவன் திரும்ப தந்திடுவார், உங்களால் மீண்டும் சிரிக்க முடியும் என்ற உண்மையை விளங்கிக்கொண்டு கவனம் செலுத்துங்கள்.

## <u>தேவனுடைய அன்பை விட்டு நம்மை யாராலும் பிரிக்க முடியுமா?</u>

> *கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயம்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும் ஜீவனானாலும் தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும் உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். ரோமர் 8:35,37-39*

தேவனுடைய அன்பைவிட்டு நம்மை ஒன்றும் பிரிக்க முடியாது என்று நம்புவது மிகவும் கடினமாக இருக்கும். பிரிவினையினால் அழிந்து போக கூடிய ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்புதான் அநேகரிடம் காணப்படுகிறது. இதனால் தான் அநேக விவாரத்துகள் நடக்கிறது. நிபந்தனையற்ற அன்பை நாம் புரிந்துகொள்வது மிக கடினம் காரணம் அதை ஒருவரிடம் (நம்மிடம்) கண்டுபிடிப்பது மிகவும் கடினம். ஆனால் தேவன் நம்மை நேசிப்பதால் நம்மில் அன்பு கூறுகிறார். நம்மிடத்தில்

இப்படிப்பட்ட அன்பை காட்டுவது காரணமற்ற ஒன்றாக தோன்றுவதால், நாம் ஏதாவது தவறு செய்யும்போது, நம்மீதான அவரது அன்பு குறைந்துவிட்டதென்று நினைக்கிறோம்.

வேதாகம விரிவுரையின்படி, தூதர்களும் பிசாசுகளும் நம்மைவிட வல்லமையுள்ளவர்களாக இருக்கின்றன, இருப்பினும் நம்மை கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரிப்பதற்கு அவற்றிற்கு வல்லமை இல்லை. தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்காதவை என்ற பட்டியலில் மரணமும், ஜீவனும், நிகழ்காரியங்கள், வருங்காரியங்கள், வல்லமைகள், பரலோகத்திலுள்ளவைகள் நரகத்திலுள்ளவைகள், சிருஷ்டிக்கப்பட்ட யாதொன்றும் அதில் அடங்கும். சுருக்கமாக சொன்னால், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை எதுவுமே பிரிக்க முடியாது. அதில் நம்முடைய கிரியைகளும் அடங்கும். ஆகவே, உங்களுடைய வாழ்க்கையில் என்ன நடந்தாலும் சரி, நீங்கள் என்ன செய்திருந்தாலும் சரி, தேவன் உங்களை நேசிக்கிறார். உங்களுடைய கிரியைகளின் நிமித்தம் அவர் உங்களை நேசிக்கவில்லை. நீங்கள் யாராக இருக்கிறீர்களோ அவ்வாரே அவர் உங்களை நேசிக்கிறார்.

## <u>நீங்கள் நேசிக்கும் நபர் மரிக்கும்போது அதை எப்படி எதிர்கொள்ள முடியும்?</u>

> *"என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். 2* கொரிந்தியர் *12:9*

நமக்கு பிரியமானவர்களை இழந்து நிற்கும் அனுபவத்தை விட கொடுமையானது வாழ்க்கையில் எதுவும் இருக்க முடியாது. அதன் அர்த்தத்தை புரிந்துகொள்ள முயன்றிடுவோம், ஏன் இப்படி நடந்தது என்பதன் விளக்கத்தை அறிந்துகொள்ள விரும்பிடுவோம். ஒருவேளை கொரோனா வைரஸ் தாக்கி இறந்திருந்தால் இந்த கேள்வி நிச்சயம் எழுந்திடும், காரணம் துரிதமாக நடந்த ஒன்றாயிருந்தது இந்த உலகத்தை விட்டு அவர்கள் பிரிந்த இறுதி நிமிடங்களில் அவர்கள் அருகில் இருந்து ஆறுதல் கூற இயலவில்லை.

பரலோகத்திற்கு இந்த பக்கம் ஏன் அவர்கள் அப்படிப்பட்ட மரணத்தில் மரித்தார்கள் என்று நமக்கு தெரியாது. ஏன் என்ற கேள்வியில் நாம் மூழ்கிவிட்டால்,

அது கசப்புணர்விற்குள் தள்ளிடும் மேலும் உங்களுடைய வருத்தத்தை அது அதிகரிக்க செய்திடும். உங்கள் இழப்பிற்கு வருத்தம் குறைய நிச்சயம் சில நாட்கள் ஆகும், என்ன நடந்தது எப்படி நடந்தது என்ற நினைவுகளை மேற்கொண்டு வருவதற்கு சில காலமாகும். நம்முடைய கண்ணீர் வழிந்தோடுவதற்கு சில நேரம் தேவைப்படும். என்னுடைய (ஜானுடைய) தாயார் மரித்தபோது, என் வாழ்க்கையில் நான் அழுத இரண்டு முறையில் அது ஒன்று. ஒவ்வொரு நபருக்கு அந்த வியாகுலத்தின் காலகட்டம் வேறுபட்டு இருக்கும். உங்களுடைய துக்கத்தை நீங்கள் துரிதமாக விலக்கி வெளியில் வரவேண்டும் என்ற நிலையை ஏற்றுகொள்ளாதிருங்கள்.

உங்களுடைய வியாகுலத்தின் காலத்தை வீணடிக்க வேண்டாம் – நீங்கள் அனுபவிக்கும் இந்த வேதனையில் இருந்து நீங்கள் எதை கற்றுக்கொள்ளவேண்டும் என்ன செய்யவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை அவரிடம் கேளுங்கள். உங்களை நீங்கள் தேவனுக்கு திறந்து கொடுத்து உடைந்து போன உங்கள் இருதயத்தின் காயங்களை அவருடைய நித்திய அன்பினால் ஆற்றிட அவருக்கு இடமளித்திட தேவையான நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

## தேவன் நம்முடைய கண்ணீர், வேதனை, உபத்திரவத்தை அகற்றிடுவார்

*அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. வெளிப்படுத்தல் 21:4*

நாம் உபத்திரவப்படும்போது, நாம் இனி எந்த வேதனையையும் அனுபவிக்க அவசியமில்லாத நாள் வருமென்று நினைப்பது கடினமாக இருக்கும். நம்முடைய எதிர்காலத்தின் அடுத்த கட்டத்தை பார்ப்பது கொஞ்சம் உற்சாகமாக இருக்கலாம் காரணம் ஏதோவொரு கட்டத்தில் இந்த பேரிடர் நின்று விடும் என்பதை அறிந்திருக்கிறோம். ஆனால் நம்மை நாமே மன அழுத்தத்திற்குள் உட்புகுத்திடாமல் இருக்க நித்திய எதிர்காலத்தை குறித்து சிந்தித்துக்கொண்டு இருக்கவேண்டும் என்பது பெரிய உந்துததலாக இருக்கிறது. தேவனுக்கு நம்முடைய வாழ்க்கையை அற்பணித்திருக்கிற நாம், வலியும் வேதனையும் உபத்திரவமும் இல்லாத உலகில் வாழ்ந்திடுவோம். வேதாகமத்தில் அந்த பூரணமான உலகம் எப்படி இருக்கும் என்பதை காண்பித்து தேவன் நம்மை ஊக்குவிக்கிறவராக இருக்கிறார்.

இப்போது நீங்கள் எப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் சரி, தேவன் தூரமாக இல்லை. உங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் அவர் பார்த்து பராமரித்து வருகிறார் (உங்களுடைய கண்ணீரும் அதில் அடங்கும்). "என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும். அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?" (சங்கீதம் 56:8). தேவன் உங்களை மறக்கவில்லை என்பதை இது உறுதிபடுத்துகிறது. உங்களுடைய வருத்தத்தின் நேரத்தில் அவர் உங்களை ஆறுதல்படுத்த விரும்புகிறார்.

## நாம் ஏன் உபத்திரவத்தை எதிர்கொள்கிறோம்?

> *என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். யாக்கோபு 1:2-4*

நீங்கள் கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் ஏன் இக்கட்டான நேரங்களை கடந்து செல்கிறீர்கள் என்று நினைத்தது உண்டா? இந்த வசனகளில் அதற்கான விடைகளை பார்க்கிறோம். அதற்கு காரணம் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படுகிறது, ஆகவே நாம் எதிர்கொள்ளும் பிரட்சனைகளை சகித்து பொறுமையை நாம் கற்றுக்கொள்கிறோம். தேவன் சகலத்தையும் அறிந்தவர், ஆகவே இந்த உபத்திரவத்தை நீங்கள் எப்படி எதிர்கொள்வீர்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார், ஆனால் உங்கள் வாழ்வின் நீங்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு பிரட்சனைகளுக்கு இடையில், தேவன் மீதான உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் வளருகிறது. இதற்கு முன்பாக நீங்கள் கடந்து வந்த பாதைகளை சற்று சிந்தித்து பாருங்கள், நிச்சயம் இந்த சூழ்நிலையையும் நீங்கள் கடந்து வரும்படி அவர் செய்திடுவார் என்று உற்சாகம் உங்களுக்கு உண்டாகும். கொரோனா வைரஸ்சை பயன்படுத்தி நீங்கள் இதுவரை இல்லாத அளவிற்கு தேவனை பற்றி சிந்திக்கவும் அவரை சார்ந்திருக்கும் தீர்மானத்திற்கு வரும்படியாகவும் தேவன் செய்திடுவார்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லாதிருந்தால், தேவன் இந்த சூழ்நிலையை பயன்படுத்தி நீங்கள் உங்கள் சுயத்தை சார்ந்திருப்பதை நிறுத்திவிட்டு உங்களையும் உங்கள் வாழ்க்கையையும் அவருக்கு அற்பணித்து நடக்கும்விதமான அனுபவங்களை அவர் தந்திடுவார்.

# தேவனோடு தனிப்பட்ட உறவை துவங்குவது எப்படி?

சந்தோஷம், மன்னிப்பு, நித்திய ஜீவன் ஆகியவற்றை வாக்குரைக்கும் தேவனுடனான தனிப்பட்ட உறவை நீங்கள் துவங்கிட விரும்பினால், பின்வரும் காரியங்களை நீங்கள் செய்திட முன்வந்திடுங்கள்:

1.தேவன் இருக்கிறார் என்பதையும் அவர் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை மனுஷ சாயலாக பூமிக்கு அனுப்பினார் என்பதையும் விசுவாசியுங்கள் (யோவான் 3:16; ரோமர் 10:9).

2. தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய, இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் உண்டான தேவனுடைய இலவசமான ஈவை ஏற்றுக்கொள்ளுங்கள். (எபேசியர் 2:8-9).

3. உங்கள் வாழ்விற்கான தேவ திட்டத்தை பின்பற்றிட ஒப்புக்கொடுத்திடுங்கள்.(1 பேதுரு 1:21-23; எபேசியர் 2:1-7).

4. உங்களுடைய வாழ்வில் இயேசு கிறிஸ்துவை தலைவராகவும் சகல அதிகாரமும் உடையவராக இருக்கும்படி தீர்மானித்திடுங்கள் (மத்தேயு 7:21-27; 1 யோவான் 4:15).

தேவனுடனான தனிப்பட்ட உறவை துவங்குவதற்கு எந்தவிதமாக மாயமும் சூத்திரமும் இல்லை. ஆகவே, விசுவாசத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டான தேவனுடைய ஈவை பெற்றுக்கொள்ள பின்வரும் ஜெபத்தை ஏறேடுப்பது சிறந்ததாக இருந்திடும்:

*அன்பின் ஆண்டவராகிய இயேசுவே, நான் பாவி என்பதை ஒப்புக்கொள்கிறேன். என்னை என்னால் இரட்சிக்க முடியாதென்று அறிந்திருக்கிறேன். என்னுடைய சார்பில் சிலுவையில் மரித்ததற்காக நன்றி. உம்முடைய மரணம் எனக்கானது என்பதை விசுவசித்து எனது சார்பில் செலுத்தப்பட்ட பலியை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்மீது இருந்த என்னுடைய நம்பிக்கையை, எனது விருப்பங்களை உம்மீது வைக்கிறேன். என்னுடைய வாழ்வில் நீர் பிரவேசிக்கும்படியாக என் வாழ்வை திறந்துகொடுக்கிறேன், மேலும் உம்மை எனது ஆண்டவராக சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, உம்மை என்னுடைய வாழ்வின் தலைவராக இருக்க அனுமதிக்கிறேன். என்னுடைய பாவங்களை எனக்கு மன்னித்து நித்திய ஜீவனை அருளியதற்காக நன்றி. ஆமென்.*

நீங்கள் இந்த தீர்மானத்தை எடுத்திருந்தால், உங்களை வாழ்த்துகிறோம்! உங்கள் வாழ்வில் மிகபெரிய அற்பணிப்பை செய்திருக்கிறீர்கள். மேலும் தேவனுடனான உறவில் வளருவதை பற்றி அறிந்துகொள்ள எங்கள் வலைதளத்தை அனுகிடவும்.

JAshow.org. மேலும் தேவையான உபகரணங்களை பெற்றுக்கொள்ள அணுகவும் : jasnews@jashow.org.

## ஆசிரியர்களை பற்றி

**Dr.** ஜான் அன்கர்பார்க் விருது பெற்ற ஜான் அன்கர்பார்க் ஷோ நிகழ்ச்சியின் தொகுப்பாளர், 150 ற்கும் மேலான புத்தகங்களையும் 155 தியான புத்தகங்களையும் எழுதியிருக்கிறார். இரண்டு மில்லியன்களுக்கு மேல் விற்பனை செய்யப்பட்ட கிறிஸ்தவ தற்காப்பு தொடரான **facts on** மற்றும் *What's the Big Deal About Jesus, Taking a Stand for the Bible,* and *God in 60 Seconds* போன்ற புத்தகங்களில் துணை ஆசிரியராக இருந்து எழுதியிருக்கிறார்.

கேத்தி சிம்ஸ் ஜான் அன்கர்பார்க் நிகழ்ச்சியின் நிர்வாக ஊழியராக இருக்கிறார், இவரும் சில புத்தகங்களை எழுதி, பிற உபகரணங்களையும் தொகுத்திருக்கிறார். தேவனுடைய வார்த்தையை பகிர்ந்துகொள்ளும் வாஞ்சையுடையவர், மேலும் பல ஆண்டுகளாக தேவனுடைய வார்த்தையை மற்றவர்கள் அறிந்து அப்பியாசப்படுத்தும் விதமாக வேதபாட வகுப்புகளில் போதித்தும் வருகிறார்.